செ.வெ.எண்: 919/2025 நாள்: 05.11.2025

**தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மூலம் சேலம் மகாத்மா காந்தி விளையாட்டரங்கத்தில் யோக பயிற்சியாளர் பணிக்கு விண்ணப்பிக்கலாம்.**

**மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி, இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

---

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மூலம் சேலம் மகாத்மா காந்தி விளையாட்டரங்கத்தில் யோக பயிற்சியாளர் பணிக்கு விண்ணப்பிக்கலாம். இதுகுறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளதாவது:

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மூலம் சேலம் மகாத்மா காந்தி விளையாட்டரங்கத்தில் யோக பயிற்றுனராக பயிற்சியளிக்க தமிழ்நாட்டில் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தால் வழங்கப்பட்ட யோகா மற்றும் இயற்கை அறிவியல் இளங்கலை பட்டம்/ யோகா மற்றும் இயற்கை அறிவியல் பட்டயப்படிப்பு சான்றிதழ் பெற்ற தகுதியுள்ள விண்ணப்பதாரரிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. இது நிரந்தரப்பணி அல்ல. முற்றிலும் தற்காலிகமானதாகும். இதன் அடிப்படையில் வேலைவாய்ப்பு சலுகைகளோ நிரந்தரப் பணியோ கோர இயலாது.

யோக பயிற்றுனராக பயிற்சி அளிக்க விருப்பம் உள்ளவர்கள் தங்கள் சுய விவரங்களுடன் சேலம் மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர், மகாத்மா காந்தி விளையாட்டரங்கம் அலுவலகத்தில் 10.11.2025 அன்று மாலை 5.00மணிக்குள் சமர்ப்பிக்க வேண்டும். அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்களின் தகுதியின் அடிப்படையில் தேர்வு நடைபெறும். தேர்வு தேதி மற்றும் விவரங்கள் பின்னர் வெளியிடப்படும். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

**செய்தி வெளியீடு**: செய்தி - மக்கள் தொடர்பு அலுவலகம், சேலம் மாவட்டம்.

Salem 24x7 IPROSalem PRO Salem pro.slm PRO Salem